பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 வைகாசி 25 ஞாயிற்றுக்கிழமை (08-06-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 191

# கடந்த 2 நாள் சண்டைகளில் இரு தரப்பினருக்கும் இழப்பு!

## உலகத்தமிழ் கூட்டமைப்பு அறிக்கை

ஈழத்தமிழருக்கு ஆதரவாக நேற்று முன்தினம் தமிழக மக்கள் நடத்திய பொது வேலை நிறுத்தத்துக்கு நன்றி தெரிவித்தும் —

தொடர்ந்து தமிழக மக்களின் ஆதரவைக் கோரியும்-லண்டனிலுள்ள உலகத் தமிழர் கூட்டமைப்பு நேற்று பத்திரிகை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. (இ-4)

## பெரியமடு பகுதியில் நேரடி மோதல்

கொழும்பு, ஜூன் 8

நெடுங்கேணியில் இருந்தும் ஓமந்தையில் இருந்தும் முன்னேறும் படையினருடன் கடந்த இரு தினங்களாக புலிகள் நேருக்கு நேர் கடும் சண்டையில் ஈடுபட்டு வருவதாக இராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி தனியார் செய்தி ஏஜென்சிகள் நேற்றுத் தெரிவித்தன.

நேற்றும் நேற்று முன்தினமும் நடைபெற்ற சண்டைகளில் அதிகாரிகள் உட்பட 20படையினர் கொல்லப்பட்டதாகவும் —

42 படையினர் காயம் அடைந்ததாகவும் — ரி.என்.எல். தனியார் தொலைக்காட்சி தெரிவித்தது.

காயமடைந்தோரில் பதினொரு பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் —

அவர்கள் கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விமான விபத்து ஆராய உயர்மட்டக்குழு

கொழும்பு, ஜூன் 8

கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான விமானங்கள் விழுந்து நொருங்கியது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள உயர்மட்டக்குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள், படைத்துறை அதிகாரிகள் ஆகியோர் இக்குழுவில் அடங்குவர்.

அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இது குறித்து ஜனாதிபதி அமைச்சரவைக்கு தெரிவித்தார். (இ-10)

## ஊர்காவல்படை காவலரண் மீது கிழக்கில் புலிகள் தாக்குதல்

### ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

மட்டக்களப்பு, ஜூன் 8

நேற்று முன்தினம் பகல் 11.20 மணியளவில் அம்பாறை மாவட்டம் 34 ஆம் கொலனியில் அமைந்துள்ள ஊர்காவல் படை காவல் அரண்கள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது ஊர்காவல் படை வீரர் ஒருவர் கொல்லப்பட்டார்.

இத்தாக்குதலின்போது 303 ரக துப்பாக்கி 1, ஜி 3 மகசின் 6, கோல்சர் 1, ஏ.கே.கோல்சர் 2, ஏ.கே. மகசின் 6, நடுத்தர ரவைகள் 250, நேட்டோ ரவைகள் 245 ஆகியன கைப்பற்றப் பட்டதாக 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது. (இ-10-21)

## மண்கிண்டிமலை முகாமிலிருந்து படையினர் தொடர்ந்து ஷெல்வீச்சு

வவுனியா, ஜூன் 8

நேற்று மண்கிண்டிமலை இராணுவ முகாமிலிருந்து கொட்டியாம்பற்று, முறிப்பு, பூதன்வயல், மதவளசிங்கன் பகுதிகளை நோக்கி ஷெல்கள் வீசப்பட்டதாகவும் —

அப்பகுதியிலுள்ள மக்கள் ஏற்கனவே பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சென்றுவிட்டதால் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

## வெள்ளியன்று நடந்த மோதலில் 15புலிகள் களப்பலி என அறிவிப்பு

வவுனியா, ஜூன் 8

ஓமந்தையிலிருந்து வடக்கு நோக்கி முன்னேற முயன்ற படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலின் போது 15 விடுதலைப் புலிகள் களப் பலியானதாக ''புலிகளின் குரல்'' வானொலி நேற்று இரவு அறிவித்தது.

எழில் வேந்தன் (முத்துலிங்கம் புண்ணியசீலன். யாழ்ப்பாணம்), அரசன் (ராஜகோபால் வதனகுமார், யாழ்ப்பாணம்), அருணன் (குபேரசிங்கம் மயூரதன், மட்டக்களப்பு),

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல்லுக்கு 2 சிறுவர்கள் பலி!

அம்பாறை, ஜூன் 8

அம்பாறை மாவட்டத்திலுள்ள காஞ்சனன்குடி அதிரடிப்படையினரின் முகாமிலிருந்துஏவப்பட்டஷெல்களுக்கு அப்பகுதியில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த இரு சிறுவர்கள் பலியானதாகவும்—

ஒரு சிறுவன் காயமடைந்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-10-164)

## குடாநாட்டில் கைது செய்யப்பட்ட 19 பேர் நேற்று விடுதலை

கொழும்பு, ஜூன் 8

குடாநாட்டில் கடந்த மாதம் கைது செய்யப்பட்ட 19 சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் அனுராதபுரம் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்கள்.

இந்த 19 பேரையும் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான ஒழுங்குகளை மனித உரிமைகள் செயலணிக் குழுவின் அனுராதபுர இணைப்பாளர் என். விசும்பெரும மேற்கொண்டுவருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுவிக்கப்பட்ட 19 பேரின் விவரம் வருமாறு:-

- ★ பிரபாகரன் — வண்ணார் பண்ணை.
- ★ இ. சிவராஜன் — கொக்குவில்.
- ★ ஊ. சுகந்தன் —சாவகச்சேரி.
- ★ சி. ராஜ்மோகன் — மானிப்பாய்.
- ★ ரா. கோபாலரட்ணம்— — கொக்குவில்.
- ★ ஆர். ரூபதீஸ்வரன் — கொடிகாமம்.
- ★ சி. சுதாகரன் — சங்கானை.
- ★ சி. சிவகுமார் —மானிப்பாய்.
- ★ செ. செல்வ ராஜா — வட்டுக்கோட்டை.
- ★ வே. சோமசுந்தரம் — யாழ்ப்பாணம்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி யுத்த முனைக்கு அதிரடிக் கொமாண்டோக்கள்

கொழும்பு, ஜூன் 8

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் துருப்பினருடன் விசேட இராணுவ அதிரடி கொமாண்டோக்களும் இணைந்து கொண்டுள்ளனர்.

அதிரடி கொமாண்டோக்கள் என படையினரால் வர்ணிக்கப்படும் இவர்கள் அனைவரும் வெளிநாட்டில் விசேட பயிற்சி பெற்றவர்கள் என்றும் —

விடுதலைப்புலிகளின் எந்த விதமான எதிர்ப்பையும் சந்திக்கும் ஆற்றல் மிக்கவர்கள் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த வியாழக்கிழமை நெடுங்கேணியில் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட கண்ணி வெடித் தாக்குதலில் கொல்லப்பட்ட நால்வரும் விசேட இராணுவ அதிரடி கொமாண்டோப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-ஐ-21-150)

## அம்புலன்ஸ் மீது துப்பாக்கிச் சூடு! ஒருவர் பலி;மூவர் காயமடைந்தனர்!!

### திருமலைப் பகுதியில் சம்பவம்

திருகோணமலை, ஜூன் 8

கந்தளாய் ஆஸ்பத்திரியில் இருந்து கர்ப்பிணிப் பெண் ஒருவரை ஏற்றி வந்து திருமலை ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டு மீண்டும் கந்தளாய் நோக்கித் திரும்பிச் சென்று கொண்டிருந்த அம்புலன்ஸ் ஒன்று 4 ஆம் கட்டைச் சந்திப் பகுதியில் வைத்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானது.

சரமாரியாகத் தீர்க்கப்பட்ட வேட்டுக்களில் சிக்கி அம்புலன்ஸ் நடத்துநர் பலியானார். சாரதி, மருத்துவ மாது, அவரது உதவியாளர் ஆகியோர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் வெள்ளி இரவு 9.20 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

கந்தளாய் கோயிலடியைச் சேர்ந்த எஸ். மகேந்திரன் என்பவரே உயிரிழந்தவராவார். இச் சம்பவத்தில் காயமடைந்த மூவரும் திருமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

திருமலை — கண்டி வீதியில் திருமலை நகரில் இருந்து 4 மைல் தொலைவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவம் நடந்த இடத்துக்கு அருகே பொலிஸ் சோதனை நிலையம் ஒன்று அமைந்துள்ளது. (இ-ஐ.150)

## சென்றல் முகாம் சம்பவம் குறித்து விசேட பொலீஸ் குழு விசாரணை

மட்டக்களப்பு, ஜூன் 8

அம்பாறை, சென்றல் முகாம் பகுதியில் 35 வயது குடும்பப் பெண் ஒருவர் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள முறைப்பாடு குறித்து விசேட பொலீஸ் குழு விசாரணையை ஆரம்பித்துள்ளது.

ஜனாதிபதியின் விசேட உத்தரவின் பேரிலேயே இந்த விசாரணை கடந்த வெள்ளியன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கற்பழித்துக் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் முருகேசபிள்ளை கோணேஸ்வரி (வயது 35) என்ற அந்தப் பெண்ணின் கணவர் உட்பட 10 பேரின் வாக்கு மூலங்களை விசாரணைக் குழுவினர் பதிந்துள்ளனர்.

சடலம் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தையும் இந்தக் குழு பார்வையிட்டது.

பிரேத பரிசோதனை மேற்கொண்ட கல்முனை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் குமுதினி துரைரத்தினத்தின் வாக்கு மூலத்தையும் இக்குழு பதிவு செய்தது.

இப்பெண் கற்பழித்துக் கொலை செய்யப்பட்டு, கற்பழிப்பை மூடி மறைப்பதற்காக அவரது உறுப்பு கிரனேட் மூலம் சிதைக்கப்பட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருப்பது தெரிந்ததே. (இ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விறகு எடுக்க சென்றவர் மிதிவெடியில்

படையினரின் பாதுகாப்பு அரண் எல்லைப் பகுதிக்குள் விறகு எடுத்துவரச் சென்ற ஒருவர் மிதிவெடியில் சிக்குண்டு வலது கால் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டார்.

கோப்பாய் வடக்கில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் சின்னப்பொடி கதிரவேலு (வயது 52) என்பவரே கால் துண்டிக்கப்பட்டவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## நூல்களை ஒப்படைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 8

கைதடி நுணாவில் அறவழிப் பொது நூலகத்தில் கடந்த இடம்பெயர்வு மற்றும் அனர்த்தங்களுக்கு முன்னர் பொது நூல்கள், சஞ்சிகைகள் ஆகியவற்றை இரவலாக எடுத்துச் சென்ற அங்கத்தவர்கள் அவற்றை மீள ஒப்படைக்குமாறு மேற்படி நூலகத்தின் நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளன.ர் (ஐ-5)

## கலையரங்கை புனரமைக்கக் கோரிக்கை

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாகச் சேதமடைந்துள்ள கலை, கலாசார நிலையங்களை திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். பிரதேச செயலாளரைக்கோரும் மகஜர் ஒன்றை குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அனுப்பிவைத்துள்ளது.

குருநகர்ப் பகுதியில் உள்ள கலை அரங்குகளைத் திருத்தியமைக்குமாறும் இந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ-51)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 12 – 02 – 1909 | 09 – 05 – 1997 |



கைதடி மேற்கைச் சேர்ந்த

### அமரர் திருமதி சீதேவி பண்டாரி

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக!

அன்னாரின் இறுதிக்கிரியைகளின் போது நேரில் வந்து ஆறுதல் மொழி கூறியோருக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் மற்றும் உதவிகள் புரிந்த சுற்றத்தார், அயலவர், நண்பர்கள அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு 08-06-97 இன்று ஞாயிறு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ப. செல்லத்துரை
(அதிபர்)

கைதடி மேற்கு,
கைதடி.
(47698)

## நினைவு கூர்ந்து ஆறுதல் அடைகின்றோம்



தேவ ஊழியர்

### செபஸ்ரியன்பிள்ளை அன்ரனிமில்ஸ்

(நதிஸ் - பாஷையூர்)

காலத்தின் விழிப்பு: 06 - 07 - 1971
கர்த்தருக்குள் நித்திரை: 08 - 05 - 1997

" ஜெயம் கொள்கிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான் ...... வெளி: 21:7

இன்று சபையில் நினைவு ஆராதனை நடைபெறும்.

எக்காளத் தொனி
பூரண சுவிசேஷ சபை
நுணாவில் சந்தி,
சாவகச்சேரி.

(47696)

## விதை நெல்லை முன் கூட்டியே பெற முயற்சி

பெரும்போக நெற்செய்கைக்குரிய காலம் நெருங்கிக் கொண்டிருப்பதை அடுத்து தமக்குத் தேவையான விதை நெல்லைப் பெறுவதற்கு நவாலிவிவசாய சம்மேளனம் முன் கூட்டியே நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

பெரும்போக நெற்செய்கைக்கு சுமார் ஆறாயிரம் புசல் விதைநெல் தேவை என்று விவசாய சம்மேளனம் உடுவில் கமநல சேவை நிலையத்திற்கு தெரிவித்துள்ளது.

இதனைக் காலதாமதமின்றிப் பெற்றுத்தருமாறு விவசாயசம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஐ-15)

## நெடுந்தீவு வித்தியாலயத்தில் உயர்தரவகுப்பு

நெடுந்தீவு, ஜூன் 8

நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க பெண்கள் வித்தியாலயத்தில் க. பொ. த, உயர்தர கலைப்பிரிவுக்கான வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை வித்தியாலய அதிபர் அருட்சகோதரி ஜெயசீலி றொட்றிக்கோ மேற்கொண்டுள்ளார்.

பாடசாலை அபிவிருத்திச் சபையின் கோரிக்கையை அடுத்து வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா இதற்கான அனுமதியை வழங்கியுள்ளார். (ஐ-111)

## நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ். வைத்தியசாலைகளில் கடமை புரியும் மருந்தாளர், இரசாயன ஆய்வாளர்களை வகுப்பு Iலிருந்து பதவி உயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 17 ஆம் திகதி கொழும்பு சுகாதார அமைச்சு திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

இப்பதவி உயர்வுக்காக விண்ணப்பித்துள்ள அனைத்துப் பணியாளர்களையும் குறித்த திகதியில் நேர் முகப் பரீட்சைக்கு தோற்ற ஆயத்தமாகுமாறு யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பிரிவுப் பணிப்பாளர் டாக்டர் கே.ரி. சிவபாதம் கோரி உள்ளார். (இ-15)

குருபரன்
கல்வி நிறுவனம்,
புத்தூர்.
பழைய, புதிய
O/L
DAY CLASS
என்பன புதிய இடத்தில்
ஆரம்பம்- 8.6.97
இன்று ஞாயிற்றுக்கிழமை
(47702) - நிர்வாகி

# மரண அறிவித்தல்கள்

## சுந்தரம்பிள்ளை பொன்னம்பலம்

(இளைப்பாறிய அதிபர், பண்டத்தரிப்பு, இந்துக்கல்லூரி)

பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை பொன்னம்பலம் 4-06-97 இல் கனடாவில் காலமானார்.

இவர் பத்மாவதியின் (கனடா) அன்புக்கணவரும், கோமதி (கனடா), சுந்தரன் (கனடா), சரவா (கனடா), தனேசன் (லண்டன்), பொன்சாமி (கனடா), தனஞ்செயன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கருணாகரராசா (கனடா), நவரத்தினராசா (கனடா), சாரதாதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், குமுதினி, குமணன், ரேணுகா, சயந்தன், துஷான் (கனடா) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் நா. பொன்னுச்சாமி (கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய்) தம்பதிகளின் மருமகனும், தர்மலிங்கம் (இ. போ. ச.), நாகலிங்கம் (கிராமிய வைத்தியசாலை, வட்டுக்கோட்டை), பரமேஸ்வரி, கண்ணகைஅம்மா (யோகம்மா, மலேசியா), சரஸ்வதி (நவமலர், சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் அஞ்சலி நிகழ்வு அவரது பண்ணாகம் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
பொ. நாகலிங்கம்
(மைத்துனர்)

பண்ணாகம் தெற்கு,
சுழிபுரம்.
(47700)

## திருமதி மகாலட்சுமி கணேசலிங்கம்

(அம்மன் வீதி, பண்டத்தரிப்பு)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், அம்மன் வீதி, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்டு, தற்பொழுது 456, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் இருந்தவருமாகிய திருமதி மகாலட்சுமி - கணேசலிங்கம் 07 - 06 - 97 அன்று அதிகாலை சிவபாதமடைந்தார்.

அன்னார் கணேசலிங்கத்தின் அன்பு மனைவியும், பிறேமதாசன் (கண்ணன், ஜேர்மனி), மாலதி (றஜிதா, திருக்குடும்ப கன்னியர் மட மாணவி) ஆகியோரின் அன்புத்தாயாரும், மகேஸ்வரி, முத்துராசா, காலஞ்சென்ற பூமணி, சிந்தாமணி (சரஸ்வதி), வடிவேல், ருக்குமணிதேவி, தாரணதேவி, சிவசுப்பிரமணியம், ராஜேஸ்வரி (மலர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பொன்னுத்துரை செல்லம்மா, செல்லத்துரை, காலஞ்சென்ற துரைராசா, இராசமணி, நவரத்தினம், பாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று 7-6-97 சனிக்கிழமை மாலை நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அன்புடன் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணேசலிங்கம்
(கணவன்)

456, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(47688)

## நடேசன் குருபரன் (சாத்திரியார்)

(சுழிபுரம் — வள்ளியம்மன் கோயிலடி)

நடேசன் குருபரன் (சாத்திரியார்) அவர்கள் 07-06-97 அன்று சனி நண்பகலளவில் இறைபதமடைந்தார்.

இவர் சுழிபுரம் மேற்கு திரு. திருமதி நடேசன் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், திரு. திருமதி விக்கிரமர் தம்பதிகளின் மருமகனும் பராசக்தியின் அன்புக் கணவரும் பரமேஸ்வரன், திருமதி இ. அன்னபூரணம், சிவசண்முகமூர்த்தி, திருமதி சி. தெய்வநாயகி, மால்மருகமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும் நடனமைந்தன் (M. T V), திருமதி வி. பரமநாயகி (சுவிட்சர்லாந்து), செல்வி குருபாமா B.com, செல்வன் சுருதிபாம் (ஜேர்மனி), செல்வி கலாநிதி (வவுனியா இணைந்த பல்கலைக்கழக கல்லூரி), செல்வி தாருகா (1ஆம் வருடம், யாழ். பல்கலைக்கழக கலைப்பீடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுமதி (ஆசிரியை, நுகேகொட ம. வி.), விமலநாதன் (சுவிட்சர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும் செல்விகள் செந்தூரினி, நிவேதா ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 8- 6- 97 காலை 10. 00 மணியளவில் சுழிபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
திருமதி கு. பராசக்தி
(மனைவி)

வள்ளியம்மன் கோயிலடி,
சுழிபுரம்.
(47699)

O/L DAY CLASS புதிய நாவலர் கல்வி நிலையம் - ஆனைப்பந்தி.
ஆரம்பம்: 09-06-97 K. S. முத்துலிங்கம், K, கருணா,
K. S. மகாலிங்கம், K. சிவம். (47701)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்ஜீரிய பொதுத் தேர்தலில் தேசிய பேரணி முன்னணியில்

அல்ஜியர்ஸ், ஜூன் 8

அல்ஜீரியாவில் நடந்த பொதுத் தேர்தலில் அரசு சார்பு கட்சியான தேசிய ஜனநாயகப் பேரணி புதிய நாடாளுமன்றத்தின் 380 இடங்களில் 155 இடங்களைக் கைப்பற்றி முன்னணிக்கு வந்துள்ளது.

இரண்டாவது இடத்தில் உள்ள இஸ்லாமியக் கட்சியான 'ஹமாஸ்' இந்த தேர்தல் முடிவை ஏற்க மறுத்துள்ளது.

தேர்தலில் முறைகேடுகள் இடம் பெற்றிருப்பதாக அது குற்றஞ்சாட்டி உள்ளது.

அல்ஜீரியாவில் இடம் பெற்ற இந்த முதலாவது பொதுத் தேர்தலின் பிரசார காலப்பகுதி பெரும் வன்முறைக் களமாக மாறியிருந்தது.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தேசிய ஜனநாயகப் பேரணிக் கட்சி தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையைப் பெறவில்லை. எனவே மற்றொரு முக்கிய அரசு சார்புக் கட்சியான தேசிய விடுதலை முன்னணியுடன் இணைந்து கூட்டணி அரசாங்கத்தை அமைக்க வேண்டிய நிலையில் உள்ளது. (ஐ)

## பஞ்சாப்பில் பஸ்ஸில் குண்டு வெடிப்பு

சண்டிகர், ஜூன் 8

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் பஸ் வண்டி ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 6பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். (ஐ)

# ஈரானுக்கு அனுமதி

தெஹ்ரான், ஜூன் 8

ஐக்கிய நாட்டு பாதுகாப்புச்சபை உணவுக்காக எண்ணெய் விற்க ஈராக்கை அனுமதிக்கும் ஒப்பந்தத்தினை மேலும் 6 மாதத்திற்கு நீடித்துள்ளது.

இத்தீர்மானத்துக்கு ஆதரவாக சபையில் 15 நாடுகள் வாக்களித்துள்ளன.

டிசம்பர் 10 ஆம் திகதியிலிருந்து அமுலிலுள்ள இந்த ஒப்பந்தத்தின் கீழ் ஈராக் உணவு, மருந்துப் பொருள்களை வாங்க 6 மாதத்தில் 2 ஆயிரம் மில்லியன் டொலர் மதிப்புள்ள எண்ணெயை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படுகின்றது.

எனினும் தான் வாங்கிய மருந்துப் பொருள்கள் நாட்டை வந்தடைவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தால் கடந்த 6 மாதத்தில் 30 ஆயிரம் குழந்தைகள் இறந்துவிட்டதாக ஈராக் கூறியுள்ளது. (ஐ-5)

## விமானியின் சாதுரியத்தால்

# தாம்பரம் தளத்தில் இருந்து சவுதி விமானம் கிளம்பியது!

சென்னை, ஜூன் 8

தாம்பரம் விமானப்படைத் தளத்தில் 330 பயணிகளுடன் கடந்த திங்களன்று தவறுதலாகத் தரையிறங்கிய சவுதி நாட்டு விமானம் அங்கிருந்து நேற்று முன்தினம் மீண்டும் பவுத்திரமாகக் கிளம்பி மீனம்பாக்கம் விமான நிலையத்தைச் சென்றடைந்தது.

5 ஆயிரம் அடிகளுக்கும் குறைவான தாம்பரம் விமானப் படைத்தள ஓடுபாதையில் இந்த "ஜம்போ ஜெற்" விமானத்தை இறக்கிய துருக்கி நாட்டு விமானி அதே ஓடுபாதையில் சாதுரியமாக விமானத்தைச் செலுத்தி அங்கிருந்து வெற்றிகரமாக விமானத்தை வெளியேற்றினார்.

இந்த ரக விமானங்களை இறக்குவதற்குக் குறைந்தது 8 ஆயிரம் அடி நீளமான ஓடுபாதை அவசியமாகும்.

விமான நிபுணர்களும், இணை விமானிகளும் கடந்த சில நாள்களாக இந்த விமானத்தை அங்கிருந்து மேலே கிளப்புவது எப்படி என்பது குறித்து ஆராய்ந்து வந்தனர்.

கடைசியாக விமானத்தை மேலே கிளப்புவது எனத் தீர்மானிக்கப்பட்டவுடன் அதன் நிறையைக் குறைப்பதற்காக பல பகுதிகள் அதிலிருந்து அகற்றப்பட்டன. எரிபொருளின் அளவும் குறைக்கப்பட்டது.

விமானம் புறப்படத் தயாரானதும் அருகே விமானப் படையினர் மருத்துவர்கள், தீயணைப்புப் படையினர் தயாராக நிலை கொண்டிருந்தனர்.

ஆனால் 5 ஆயிரம் அடிகளுக்கு குறைவான தூரத்துக்குள் ஓடி விமானத்தை சாதுரியமாக மேலே கிளப்பி விட்டார் விமானி. (ஐ)

## அர்ஜூன் டாங்கி

புதுடில்லி, ஜூன் 8

இந்தியா தான் சொந்தமாக வடிவமைத்த அர்ஜூன் என்ற டாங்கியை உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளது. இது தொடர்பான சோதனைகள் நிறைவுபெற்று விட்டதாக புதுடில்லியில் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

உலக அரங்கில்

அர்ஜூன் டாங்கி இராணுவத்தில் சேர்க்கப்பட இன்னும் 5 ஆண்டுகள் ஆகலாம் என்றும்—

அது அமெரிக்கா, ஜேர்மன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் தரத்துக்கு நிகரானது என்றும் பாதுகாப்பு நிபுணர்கள் கூறியுள்ளனர். (ஐ-5)

# மெக்ஸிக்கோ ஆற்றில் 48 சடலங்கள் மீட்பு

மெக்ஸிக்கோ சிற்றி, ஜூன் 8

அமெரிக்காவுக்கும் மெக்ஸிக்கோவுக்கும் இடையேயான எல்லையோரம் செல்லும் நீண்ட ஆற்றில் இருந்து இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 48 சடலங்கள் மீட்கப்பட்டிருப்பதாக மனித உரிமைக் குழுக்கள் தெரிவித்துள்ளன.

இவற்றில் 9 சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் காணப்பட்டன.

3 ஆயிரம் கிலோமீற்றர் நீளமான இந்த ஆற்றைத் தாண்டி அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக நுழைபவர்களே நீரில் மூழ்கியும், எல்லையோர பாதுகாப்புப் பிரிவினரின் தாக்குதலுக்கு இலக்காகியும் மரணமடைவதாகத் தெரியவருகிறது.

இந்த ஆற்றைக் கடந்து அமெரிக்காவினுள் நுழைய நாளாந்தம் நூற்றுக்கணக்கான மெக்ஸிக்கோ நாட்டவர்கள் முயன்று வருகின்றனர். (ஐ)

# ஹூட்டு அகதிகள் விவகாரத்தை கையாளத் தனியான அமைச்சர்

## அதிபர் கபீலா நியமிப்பார்

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் தங்கியுள்ள ருவாண்டா நாட்டு அகதிகளைச் சொந்த நாட்டிற்குத் திருப்பி அனுப்புவது குறித்து சர்வதேச முகவர்களோடு சேர்ந்து பணியாற்ற தனியான அமைச்சர் ஒருவரை ஜனாதிபதி லோறன் கபீலா நியமிக்கவுள்ளார்.

சிம்பாப்வே தலைநகர் ஹராரேயில் நடைபெற்றுவரும் ஆபிரிக்க ஒற்றுமை நிறுவனத்தின் உச்சிமாநாட்டில் கலந்து கொண்ட சமயம் ஐ. நா பொதுச் செயலாளர் கோபி அனானுடன் தனிப்பட்ட முறையில் பேசியபோது கபீலா இந்த யோசனையைத் தெரிவித்தார்.

அகதிகளின் நிலை குறித்து கபீலாவுடன் பேசிய கோபி அனான், மனிதநேய சமூகத்துடன் கூடுதல் ஒத்துழைப்பை ஏற்படுத்திக் கொள்வதன் அவசியத்தை சுட்டிக் காட்டினார்.

இந்த விடயத்தில் அகதிகள் புனர்வாழ்வுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத்துடன் இணைந்து பணியாற்ற தமது அரசாங்கத்தில் அமைச்சர் ஒருவரை நியமிப்பதாக கபீலா தெரிவித்தார். (ஐ-5)

# முபுட்டுவுக்கு நிம்மதி தரும் இடம்; அதிபர் மண்டேலா தேடுகின்றார்

ஹராரே, ஜூன் 8

நாட்டை விட்டு விரட்டப்பட்டுள்ள முன்னாள் ஸயர் ஜனாதிபதி முபுட்டு சிறுநீரகப் புற்று நோயால் நலிந்து வாடும் இவ்வேளையில் அவர் நிம்மதியாய் தரித்திருந்து மரணத்தைத் தழுவக்கூடிய இடம் ஒன்றை முபுட்டுவின் நண்பரான தென்னாபிரிக்க ஜனாதிபதி மண்டேலா தேடி வருகிறார். ஆனால் ஆபிரிக்க நாடுகளில் எதுவுமே முபுட்டுவை ஏற்றுக் கொள்ளத் தயாராயில்லையெனத் தெரிவித்துள்ளன.

முபுட்டுவுக்கான எல்லாக் கதவுகளுமே மூடப்பட்டுவிட்டன. யாருக்குமே அவர் வேண்டாதவராகிவிட்டார் என சமீபத்திய ஹராரேயில் நடந்த ஆபிரிக்க ஒருமைப்பாட்டு மகாநாட்டில் கலந்து கொண்ட தெற்காபிரிக்க நாடுகள் "ராய்ட்டரிடம்" செவ்வாயன்று தெரிவித்தன.

முபுட்டுவின் ஆடம்பர மாளிகைகளைக் கொண்ட பிரான்ஸ் அவரை வரவேற்றுப் புகலிடம் அளிக்க இதுவரை தயாராக இருந்தது. ஆனால் இந்த மாதத்தில் நடந்த தேர்தலில் வென்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ள புதிய அரசாங்கம் அவரை வரவேற்கத் தயாராயில்லையெனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## பஞ்சநிலை

வடகொரியாவின் உணவு இருப்பு இன்னும் இரண்டு வாரத்தில் முடிவடைந்து விடும் என்று ஐ. நா. நிறுவனம் மதிப்பிட்டுள்ளது.

ஊட்டச்சத்து நிலைவரம் அங்கு மோசமடைந்து வருவதாகவும் றோமில் செயற்படும் உலக உணவு நிறுவனத்தின் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

# காரைநகர் நீர் விநியோகம்: புதிய திட்டம் பரிசீலனையில்

நெடுந்தீவு, ஜூன் 8

காரைநகர் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தைப் புனரமைப்பது தொடர்பான மாவட்ட மீள் பரிசோதனைக் குழுவின் சிபார்சு கொழும்பிலுள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரக தலைமையகத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

8 லட்சத்து 80 ஆயிரத்து 560 ரூபா இத் திட்டத்துக்கெனச் செலவிடப்படவுள்ளது.

ஐ. நா தூதரகத்தின் அங்கீகாரம் கிடைத்ததும் உடனடியாக வேலைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜெ. எக்ஸ். செல்வநாயகம் தெரிவித்தார். (ஐ-111)

# குருநகர்ப் பகுதியில் பல வீதிகள் சேதம்

குருநகர், ஜூன் 8

குருநகர்ப் பகுதியிலுள்ள பெரும்பாலான வீதிகள் குண்டும் குழியுமாகக் காணப்படுவதனால் இவ் வீதிகளில் வாகனங்களில் பிரயாணஞ் சய்வோர் மிகுந்த சிரமத்தை னுபவித்து வருகிறார்கள். குறிப்பாக டேவிற்வீதி, மவுண்கார்மேல்வீதி, புதுமைமாதா கோயில்கிழக்கு, மேற்குவீதி, 6 ஆம் குறுக்குவீதி, குருநகர் தண்ணீர்த்தாங்கி, முதலாம் குறுக்குவீதி ஆகியவை [illegible] மடைந்து காணப்படுகின்றன. (ஐ-51)

## விளையாட்டுப் போட்டி

பருத்தித்துறை கற்கோவளம் மெ. மி. த. க. பாடசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் அதிபர் எஸ். தங்கராசா தலைமையில் நடைபெறும்.

பருத்தித்துறை கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் வி. ரி. செல்வரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-173)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 8

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை அதிபர் எஸ். சண்முககுமார் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக நல்லூர், யாழ்ப்பாணம், தீவகக்கோட்டக் [illegible] கலந்துகொள்வார். (ஐ-4)

# யாழ். விவசாய உற்பத்திகளை தெற்கே அனுப்ப சமாசம் முயற்சி

யாழ். மாவட்ட விவசாயிகளின் நன்மை கருதி அவர்களின் விவசாய உற்பத்திப் பொருள்களை தென் இலங்கையில் சந்தைப்படுத்தும் நோக்குடன் அவற்றைக் கப்பலில் கொண்டு செல்வதற்கான முயற்சியில் யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சி சந்தைப்படுத்தல் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஈடுபட்டுள்ளது.

இதனை நடைமுறைப் படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி யாழ். அரசாங்க அதிபர் செ. பத்மநாதனுடன் சமாசத்தினர் கலந்துரையாடியுள்ளனர்.

வாழைக்குலை, வெங்காயம், மரக்கறி, புகையிலை போன்றவற்றை கப்பலில் அனுப்பி வைப்பதற்கான இட வசதிகளைச் செய்து தருவதாக அரசாங்க அதிபர் உறுதியளித்துள்ளார். ஆகையால் விவசாயிகள் தத்தம் பகுதி விவசாய உற்பத்தி நுகர்ச்சிச் சங்கங்கள் ஊடாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-118)

## சைவசமயப் பரீட்சைச் சான்றிதழ்

யாழ்ப்பாண சைவபரிபாலன சபையால் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடத்தப்பட்ட ஆண்டு 11 மாணவர்களுக்கான பரீட்சையில் சித்தியடைந்தவர்களது சான்றிதழ்கள் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சான்றிதழ்கள் கிடைக்காத பாடசாலை அதிபர்கள் தேர்வுச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கல்லுண்டாய் உப்பளம் பகுதிக்குள் கடல் தண்ணீர் புகும் ஆபத்து

யாழ்ப்பாணம் ஜூன் 8

யாழ்ப்பாணம் கல்லுண்டாய் உப்பளம் அமைந்துள்ள கரையோரப் பகுதியில்உள்ள அணைக்கட்டு உடைக்கப்பட்டுள்ளது. அதனைச் சூழவுள்ள ஏனைய பகுதிகளில் கற்கள் யாவும் தோண்டி எடுக்கப்பட்டு வருவதனால் அப்பகுதிக்குள் கடல் நீர் புகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது:

இதனால் கரையோரப் பகுதியை அண்டிய விவசாய நிலங்களும் விவசாயத்திற்கு உதவாத நிலைக்கு தள்ளப்படவுள்ளதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கல்லுண்டாய் உப்பளப் பகுதியில் இருந்த அணைக்கட்டு உடைக்கப்பட்டு கல், மண் என்பன ஏற்றப்பட்டதுடன் தற்போது அப்பகுதியில் ஏனைய தரவை நிலங்களும், நிலத்தின் கீழுள்ள கற்கள் தோண்டப்பட்டு குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன.

(ஐ-15)

## அச்சுவேலிக்கு அம்புலன்ஸ்

திருநெல்வேலி, ஜூன் 8

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி ஒன்று விரைவில் வழங்கப்படவுள்ளது.

யாழ். அரசினர் போதனா வைத்தியசாலைக்குச் சொந்தமான அம்புலன்ஸ் வண்டி ஒன்று நீண்டகாலமாக பழுதடைந்த நிலையில் விடப்பட்டிருந்தது. அதனை யாழ். சுகாதார சேவை பிரதிமாகாண பணிப்பாளர் பணிமனையினர் பொறுப்பேற்று திருத்த வேலைகளைச் செய்து முடித்துள்ளனர். விரைவில் இதனை அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு கையளிக்கவிருப்பதாக யாழ். சுகாதார திணைக்கள உயரதிகாரி தெரிவித்தார். (ஐ-135)

---

''என் ஜனத்தை ஆற்றுங்கள் தேற்றுங்கள்''
(ஏசா, 40:1)

## சுவிசேஷ கூட்டம்

**இடம்:** மிருசுவில் (தவசிக்குளம்)
**நாள்:** 09-06-97 (திங்கள்)
**காலம்:** மாலை 4 மணி — 7 மணி

உங்கள் வாழ்க்கையில்! பிரச்சினைகளா?
வியாதியா? கஷ்ட துன்பங்களா?
பில்லி-சூனிய பிசாசின் கட்டுக்களா?
''சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா''
(யோ, 5:6)

வாருங்கள்! தேவவார்த்தைகளைக் கேளுங்கள்;
தெய்வீக சுகம், விடுதலை பெறுங்கள்.
''இயேசுவே தெய்வீக சுகமளிக்கிறவர்''
யாவும் இலவசம்!

**அடைக்கல கூடாரசபை**
(துணவி, தொல்புரம், குருநகர், மிருசுவில், ஊர்காவற்றுறை)

(47690) போதகர், ஊழியர்கள்.

---

அளவெட்டி மல்லாகம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

## களஞ்சியப் பொறுப்பாளர் பதவி வெற்றிடம்

சம்பள அளவுத்திட்டம்:

$$\frac{855 - 1385}{30 \times 7 - 40 \times 8} \quad (202\text{-}10)$$

(இத்துடன் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்)

மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் செய்பவர்கள் சங்கத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தை ரூபா 5/- செலுத்திப் பெற்று 30-06-97 ஆம் திகதிக்கு முன்னர் பொதுமுகாமையாளர், அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம், இணுவில் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அன்றி நேரடியாகவோ அனுப்புதல் வேண்டும்.

**தகைமைகள்:-**

01. வயதெல்லை — 23 தொடக்கம் 40 வரை
02. இலங்கைப் பிரசை
03. அ) கூட்டுறவுப்பணிப்பாளர் 11ஆவது சம்பளத் திட்டத்தில் களஞ்சியப்பொறுப்பாளர்/ கொள்வனவு உத்தியோகத்தர்/ சில்லறைப் பண்டகசாலை முகாமையாளர்/ சில்லறைப்பண்டகசாலை மேற்பார்வையாளர் பதவியில் 2 வருட அனுபவம் அதனை ஒத்த பதவிகளில் கூட்டுறவுப்பணியாளர் 12 ஆவது சம்பளத்திட்டத்தில் கடமையாற்றிய 4 வருட அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திரம் உயர்தரம்/ க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி.

அல்லது

இ) கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திரம் சாதாரண தரத்தில் சித்தி/ க. பொ. த (சாதாரணதரத்தில்) எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ தூயகணிதம்/ தமிழ் மொழி அல்லது சிங்கள மொழி என்பவற்றினை உள்ளடக்கியதாக 4 திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி அத்துடன் களஞ்சியப் பொறுப்பாளர் பதவியில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

04. சங்கத்தால் நிர்ணயிக்கப்படும் ரொக்கப்பிணை, ஆதனப்பிணை செலுத்த தயாராக இருத்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்.

06 - 06 - 97 (சி/893)

---

## கண்ணீர் அஞ்சலி

வலி. மேற்கு, சுழிபுரம் மத்தி J/173 பிரிவு
கிராம உத்தியோகத்தர்
**திரு. நா. குமரகுருநாதன்**
அவர்களது தந்தையார்

### அமரர் அப்பாத்துரை நாகலிங்கம்

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வலி.மேற்கு பிரதேச செயலக
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
சங்கானை.

(47691)

---

University Publication
**UNIVERSITY OF JAFFNA**

**Now Available FOR SALE**

GROUND WATER QUALITY PATTERNS OF THE JAFFNA VALIKAMAM REGION

A STATISTICAL RETROSPECTIVE STUDY

BY

**C. Elankumaran,**
B. Sc.(Hons), M. Stat.
Lecturer in Statistics,
Department of Economics,
University of Jaffna.

A work that describes the drinking water quality in terms of Chloride and Hardness concentrations by Multivariate Statistical Analysis.

Price:- Rs. 202/-

Please contact Assistant Registrar, Academic Branch or Bursar, Finance Branch, University of Jaffna.

Registrar
1997 06 03
(C/869)

---

## 58 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு

09 - 06 - 97 தொடக்கம் 30 - 06 - 97 வரை
போட்டோ ஸ்ரற் பிரதிகள்:
ரூபா 4 மட்டும்
அடையாள அட்டை கவரிடுதல்:
அரைச்சலார்
றைக்கிளீன் சேவைகளில்:
விசேட சலுகைகள்

இம் மூன்றும் இணைந்த சேவைகளையும் ஒரே இடத்தில் பெற நாடுங்கள்:

### சன்லைற் றைக்கிளீனேர்ஸ்

பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
கிளை: கச்சேரியடி, யாழ்ப்பாணம்.

(47692)

---

யாழ்ப்பாணம்

## தனியார் வைத்தியசாலைகள்

ஆனைப்பந்தி

வெளிநோயாளர் பிரிவு ஒழுங்காகச் செயற்படுவதுடன் விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனைப் பிரிவும் செயற்படுகின்றது.

-நிர்வாகி

(47687)

---

உ
ஓம் சக்திதுணை

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு

## ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய

வருடாந்த சகஸ்ர (1008)
மகா சங்காபிஷேகமும்
பஞ்சமுக விநாயகர் வீதி உலாவும்

நிகழும் ஈசுர வருஷம் வைகாசி மீ 25 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் மாலை 4 மணிக்கு வசந்த மண்டப பூசையும் நடைபெற்று பஞ்சமுக விநாயகர் விசேட மேளக்கச்சேரியுடன் பூந்தொட்டியில் வீதி வலம் வர அருள் பாலித்துள்ளது.

அடியார்கள் அனைவரும் எம்பெருமானை வழிபட்டு இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

அரியாலை. (47640) உபயகாரர்

---

## திருமறைக் கலாமன்றம்

**CENTRE FOR PERFORMING ARTS**

### பெண் அலுவலர் தேவை

கலை, கலாசார பணிகளில் நாட்டமுடையவராயின் நாம் தேடுபவர் நீங்களாக இருக்கலாம்,

ஆகக் குறைந்த கல்வி: G. C. E. (O/L) ஆங்கிலத்தில் பேச, எழுத தெரிந்தவராயின் சிறப்புடையது. ஆங்கில/ தமிழ் தட்டச்சு தெரிந்தவர் விரும்பத்தக்கது.

ஆர்வமுடையோர் தங்கள் சுய விவரங்களை **11 — 06 — 1997-** க்கு முன்பதாக எமக்கு அனுப்பி வைக்கவும்.

பொதுச் செயலர்,
திருமறைக் கலாமன்றம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/896)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழல் பாதுகாப்புக் கருதி

# யாழ். பஸ் நிலையப் பகுதியை புனரமைக்க முன்னுரிமை தேவை

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ். நகரப் பகுதியின் சூழல் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு யாழ். பஸ் நிலையப் பகுதியை புனரமைக்க முன்னுரிமை வழங்க வேண்டும் என்று யாழ். மாவட்ட சூழல் பாதுகாப்புச் சபை அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

உலக சூழல் பாதுகாப்புத் தினத்தையொட்டி கடந்த வியாழனன்று யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள தமது அலுவலகத்தில் நடத்திய விழாவிலேயே அந்த அமைப்பு இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

குழுவின் தலைவரும், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தருமான பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் நடந்த இவ்விழாவில் பங்கு பற்றிய பலரும் இக்கோரிக்கையை விடுத்தனர்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் வி. பி: பாலசிங்கம் உட்படப் பலர் விழாவில் கலந்து உரையாற்றினர்.

சூழல் பாதுகாப்புத் தினத்தை ஒட்டி நகரில் பல இடங்களில் சிரமதான நிகழ்வுகளும் இடம் பெற்றன.

யாழ். பல்கலைக்கழகத்தில் பராமரிப்புப்பகுதியினரால் மரக்கன்றுகள் நாட்டப்பட்டன. (ஐ-3)

★ பிறப்புச் சான்றிதழ்களில்

## பெற்றோர் திருமணம் புரிந்தனரா? இக்கேள்வி விரைவில் நீக்கப்படும்

கொழும்பு, ஜூன் 8

சட்ட பூர்வமாகத் திருமணஞ் செய்யாத பெற்றோருக்குப் பிறந்த பிள்ளைகள் தமது இக்கட்டான நிலைமை குறித்து இனிமேல் கவலை கொள்ள வேண்டியிருக்காது.

பிறப்புச் சான்றிதழ்களில் பெற்றோர் திருமணம் புரிந்தவர்களா என்ற கேள்வியை நீக்கி விடுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. என்று சுகாதார அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இன்னமும் பெருமளவு பெற்றோர் குறிப்பாக கிராமப் புறங்களைச் சேர்ந்தவர்கள் சட்ட பூர்வமாகத் திருமணப் பதிவு செய்யாமல் பிள்ளைகள் பெற்றுவருகின்றனர்.

பிறப்புச் சான்றிதழில் பெற்றோர் திருமணம் புரிந்தவர்களா என்ற கேள்வியை நீக்கி விடுவதற்கான யோசனை ஒன்றை தாம் அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருப்பதாக சுகாதார அமைச்சர் கூறினார்:

பிறப்புச் சான்றிதழ்களில் பெற்றோர் திருமணம் புரிந்தவர்களா எனக் கேள்வி கேட்கும் முறை 1958 இல் அறிமுகப் படுத்தப்பட்டது. (ஐ-4)

# கிளிநொச்சி அரச அதிபருக்கு வவுனியாவிலும் அலுவலகம்

## அரசிடம் அவரே கோருகிறார்

கொழும்பு, ஜூன் 8

கிளிநொச்சி அரச அதிபரின் தற்காலிக அலுவலகம் ஒன்றை வவுனியாவில் இயக்க அனுமதி தருமாறு கிளிநொச்சி அரச அதிபர் எஸ். தில்லை நடராசா பொது நிர்வாக அமைச்சைக் கேட்டுள்ளார்.

பொது நிர்வாக அமைச்சு அதிகாரிகளை அவர் நேரடியாகச் சந்தித்து இக் கோரிக்கையை விடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மக்களுக்கான தேவைகள் தொடர்பாக உயர் மட்டத்துக்கு எடுத்துக் கூறி நிவாரணம் பெற முடியாத நிலை இப்போது உள்ளது. கிளிநொச்சி — வவுனியா பாதை தற்போது மூடப்பட்டுள்ளதால் கிளிநொச்சியில் இருந்து பெரும் கெடுபிடிகளுக்கு மத்தியில் மன்னார்ப் பாதையூடாகவவுனியா வர வேண்டியுள்ளது.

வவுனியாவில் தங்கி நிர்வாகப் பணிகளை மேற்கொள்ள வசதியாக தற்காலிக அலுவலகம் ஒன்றை அங்கு அமைக்க அனுமதிக்க வேண்டும் — என்றும் அவர் கோரியுள்ளார். (ஐ-3)

# சமூக அபிவிருத்தி நிறுவனம் முன் பள்ளிகளுக்கு உதவி

யாழ். சமூக அபிவிருத்தி நிறுவனம் மக்கள் மீளக் குடியேறியுள்ள பின்தங்கிய கிராமங்களிலுள்ள முன்பள்ளிகளை புனரமைப்பு செய்து அவற்றிற்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

புத்தூர், சிறுப்பிட்டி, நீர்வேலி, அச்சுவேலி, கொடிகாமம், மட்டுவில் ஆகிய இடங்களிலுள்ள முன்பள்ளிகள் பலவற்றில் தளபாட வசதிகள் இன்றி நிலத்தில் இருந்து பிள்ளைகள் படிப்பதாகவும், குடி தண்ணீர் பெற பாத்திரங்கள் இல்லாதிருப்பதாகவும் இவற்றை நிவர்த்தி செய்வதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி நாடப்பட்டிருப்பதாகவும் மேற்படி மன்ற நிர்வாக செயலாளர் தெரிவித்தார். (ஐ-135)

## தீவிபத்தில் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

சாவகச்சேரியில் கடந்த திங்கட்கிழமை இரவு குப்பி விளக்கினால் ஏற்பட்ட தீவிபத்தில் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பப் பெண் ஒருவர் நேற்று முன் தினம் அங்கு மரணமானார்.

சுழிபுரத்தில் இருந்து இடம் பெயர்ந்த பாலேந்திரன் சகுந்தலாதேவி (வயது 29) என்ற மூன்று பிள்ளைகளின் தாயே உயிரிழந்தவராவார். (ஐ-15 )

## ஊழியருக்கு சீருடைத்துணி

நவாலி, ஜூன் 8

யாழ். செயலகத்தில் மத்திய அரசின் கீழ் பணிபுரியும் அலுவலக ஊழியர்களுக்கு இவ்வாண்டுக்குரிய இலவச சீருடைத் துணிகள் வழங்கப்படுகின்றன. (ஐ-100)

## மெய்வல்லுநர் போட்டி

சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணி முதல் நடைபெறவுள்ளது: பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கமும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக நிதி உதவியாளர் மா. திருவாகவூரனும். கௌரவ விருந்தினராக உடற்கல்வி ஆசான் அ. தம்பித்துரையும் கலந்து கொள்வர்.

# விழிப்புலன் இழந்த மாணவரின் ஜி. சீ. ஈ. பெறுபேறு கிடைக்கவில்லை

அண்மையில் வெளியான ஜி. சீ. ஈ: சாதாரண தரப் பரீட்சை முடிவுகளில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இருந்து தோற்றிய விழிப்புலன் வலுவிழந்த இரு மாணவர்களது பெறுபேறுகள் குழறுபடியான முறையில் அனுப்பப்பட்டுள்ளன.

இவர்கள் இருவரும் நான்கு பாடங்களில் தோற்றவில்லை என்றும்—

ஏனைய நான்கு பாடங்களுக்குரிய பெறுபேறுகள் தீர்மானிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் சம்பந்தப்பட்ட இரு மாணவர்களும் மேற்படி பரீட்சையில் எல்லாப் பாடங்களுக்கும் தோற்றியிருந்தனர்.

முன்னர் 1995 ஆம் ஆண்டுக்கான ஜி. சீ. ஈ. (சா.த) விசேட பரீட்சையிலும் மேற்படி இரு மாணவர்களும் தோற்றியிருந்தனர். அச்சமயமும் இவர்களது 4 பாடங்களுக்கான பெறுபேறுகள் பரீட்சைத் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்படவில்லை.

இந்தத் தடவையும் இவர்களுக்கு அதே கதி ஏற்பட்டுள்ளது.

கல்வியையே தங்கள் ஆதாரமாகக் கொண்ட இவர்கள் தங்கள் எதிர் காலம் குறித்துக் கவலை கொண்டுள்ளனர்.

இவர்களது பெறுபேறுகளைப் பெற்றுக் கொடுக்க தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் எஸ். புண்ணியசீலன் நடவடிக்கை எடுத்துள்ளார். (ஐ)

# ஊர்காவற்றுறை நகரப் பகுதியில் பலஇடங்களிலும் பற்றைக் காடுகள்

## மீளக்குடியமரும் மக்கள் நடமாட முடியாத நிலை

யாழ்ப்பாணம், ஜூன்8

ஊர்காவற்றுறை நகரப் பகுதியில் மக்கள் மீளக் குடியேறி வருகின்ற போதிலும் நகரப்பகுதியில் பல இடங்கள் இன்னமும் துப்புரவு செய்யப்படாத நிலையில் பற்றைக்காடாகவே காணப்படுகின்றன.

ஊர்காவற்றுறை பொதுச் சந்தை, துறைமுகத்திற்குச் செல்லும் வீதியில் நீதிமன்றக் கட்டடம், பொலீஸ் நிலையக் கட்டடம், இலங்கைவங்கிக் கட்டடம், சுங்க இலாகாக் கட்டடம் ஆகியவை முன்பு இயங்கிய பகுதிகள் எவரும் செல்ல முடியாத அளவுக்கு பற்றைகள் மூடி வளர்ந்து உள்ளன.

இக் கட்டடங்கள் இருந்த இடமே தெரியாத அளவுக்கு சேதமடைந்து காணப்படுகின்றன. கட்டடத்தைச் சுற்றி பற்றைக்காடுகளாக உள்ளது. (ஐ-117

# விதை வெங்காயம் வடமராட்சியில் தேக்கம்

வடமராட்சிப் பகுதியில் உள்ள விவசாயிகளிடம் விதை வெங்காயம் கையிருப்பில் இருப்பதாகவும், வலிகாமம் பகுதியிலுள்ள விவசாயிகள் சம்மேளனங்கள் தமக்கு ஏற்பட்டுள்ள விதை வெங்காயத்திற்கான தட்டுப்பாட்டை நீக்குவதற்கு வடமராட்சிப் பகுதியிலிருந்து விதை வெங்காயத்தை பெறுவதற்கு தம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறும் தொல்புரம், கீரிமலை, உடுவில் ஆகிய கமநல சேவை நிலையங்களின் பெரும்பாக உத்தியோகத்தர் பொ: குகநாதன் தெரிவித்துள்ளார்.

புலோலி கம நல சேவை நிலையத்தினருடன்தொடர்பு கொண்டு தாம் விதை வெங்காயத்தை அப் பகுதி விவசாயிகள் சம்மேளனங்களிடமிருந்து பெற்றுத் தருவதற்கும், அங்கிருந்து விதை வெங்காயத்தை வலிகாமம் பகுதிக்கு எடுத்து வருவதிலுள்ள போக்கு- வரத்துக் கஷ்டங்களை நீக்குவதற்கும் தாம் நடவடிக்கை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-135)

## புவியல்துறை தலைவர்

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ். பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவராக கலாநிதி கா. குகபாலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக பேரவை இந்த நியமனத்தை வழங்கியுள்ளது. (இ-3)

## மாதகல் பஸ்சேவை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

இளவாலைப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை பயணிகள் பஸ் மீது மேற் கொள்ளப்பட்ட கிளைமோர் கண்ணிவெடித்தாக்குதல் சம்பவத்தை அடுத்து கடந்த சில தினங்களாக மாதகல் — யாழ்ப்பாணம் பஸ் சேவை இடம் பெறவில்லை.

இதனால் அப்பகுதி மக்கள் பயணத்தை மேற் கொள்ளுவதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

நோயாளிகள், அவசர தேவைகள் ஆயினும் கைக் கிளைகளிலேயே தமது பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. (ஐ-15)

பழ மரங்களுக்கு மருந்து விசிறும்

# விசைத் தெளி கருவிகள் எடுத்துவரப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூன் 8

பழமரங்களுக்கு மருந்து விசிறுவதற்கான 5 விசைத் தெளிகருவிகள் யாழ். மாவட்ட கமநலசேவைகள் கேந்திர நிலையங்களுக்கு வழங்குவதற்கென கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

மாமரம் போன்ற பெரிய பழமரங்களில் பூச்சிகளைக் கட்டுப்படுத்த இவ்வகை விசைத் தெளிகருவிகள் மூலமே மருந்து விசிற முடியும்.

கமநலசேவைகள் கேந்திர நிலையம் இவ்விசைத் தெளி கருவிகளை வாடகை அடிப்படையில் சேவைக்கு விடும் என்றும் இதன்மூலம் பயன் தரும் பழமரங்கள் சிலவகை நோயினால் பாதிப்படைவது தடுக்கப்பட்டு உரிய பலன் பெறப்படும் என்றும் கமநலசேவைகள் கேந்திர நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வகை விசைத் தெளி கருவிகள் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படுவதற்கு முன்னர் தடை விதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

## நடமாடும் ஆட்பதிவு சேவை

யாழ்ப்பாணம், ஜூன்8

யாழ். செயலக ஆட்பதிவுத் திணைக்களத்தின் நடமாடும் பொதுசனத் தொடர்பு மையம் ஒன்று நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிமுதல் பிற்பகல் 4மணிவரை உடுவில் பிரதேச சபை பணிமனையில் இயங்கவுள்ளது.

விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து இதுவரை கிடைக்காதவர்களும் மற்றும் விசேட அடையாள அட்டைகளில் ஏதும் மாற்றம் செய்யப்பட வேண்டியவர்களும் அங்கு தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (ஐ-15)

# வளலாய் சல்லி வீதிக்கு கிழக்கே மக்கள் மீளக்குடியமர அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 8

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் வளலாய் கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள சல்லி வீதிக்கு கிழக்குப் புறமாக உள்ள குடியிருப்புக் காணிகளில் மீண்டும் மக்கள் மீளக்குடியமர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாயன்று 511 ஆவது படையணியின் கட்டளை அதிகாரியுடன் தாம் நடத்திய கலந்துரையாடலின் முடிவில் இந்த அனுமதி வழங்கப்பட்டதாக வலி. கிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

சல்லி வீதியில் காவலரணுக்கு கிழக்குப் புறமாக குறிப்பிட்ட பகுதிக்கு அப்பால் விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிக்கவும் படை அதிகாரி அனுமதி வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட குடியிருப்பாளர்கள் வளலாய்ப் பகுதி கிராமசேவையாளருடன் தொடர்பு கொண்டு மீளக் குடியமர்வதற்கான பதிவை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இல. 141, பாங்சால்வீதி, (சின்னக்கடைக்கு அருகாமையில்) 1¾, பரப்புடன் கூடிய சகல விதமான வசதிகளுடன் வீடு ஒன்று உடன் விற்பனைக்குண்டு. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். [47641]

ஹொண்டா C.D 125, ( Twin - Not registered ), National T.V'கலர் (Colour -20)' என்பன உடன் விற்பனைக்குண்டு: தொடர்பு: பே.கெங்காபரம், மெய்கண்டான் வீதி,மட்டுவில்வடக்கு, சாவகச்சேரி. [47681]

நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் அமைந்த வீடும், வீட்டுத் தளபாடங்களும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- 62, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம், [47689]

### வீடு தேவை

யாழ். மாநகர எல்லைக்குள் சகல வசதிகளுடன் கூடிய வீடு தேவை. பிரதான வீதிகளை அண்மித்தது விரும்பத் தக்கது. விற்க விரும்புவோர் தொடர்பு கொள்க:- C/o 624, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். [47666]

### தேவை

நல்ல நிலையிலுள்ள வீடியோ டெக், கடைக்குரிய சோக்கேஸ், அலுமாரி, விறாக்கி என்பன தேவை. தொடர்பு: எஸ். சதாஸ், இல. 105, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [47646]

நல்ல நிலையிலுள்ள ''இயர் போன்'' (EarPhone) வைத்திருப்பவர்கள்தொடர்பு கொள்ளவும்: வி.ரி.ஆர். குருக்கள் (தபாற்கந்தோர் அருகாமை) நெல்லண்டை பருத்தித்துறை. [47679]

### விற்பனையாகிறது

1997 ஆம் ஆண்டுக்கான மனோரமா இயர்புக் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, இல. 04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [சி/882]

### கார் விற்பனைக்கு

பேர்ஜோ (Peugeot) 404, திறம் நிலையில் 7 சிறீ. தொடர்பு: இல. 14, ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம் அல்லது இராஜசூரியர், கல்லூரி ஒழுங்கை, மானிப்பாய். [47685]

### கணிதம், ஆங்கிலம்

O/L 97 இல் Distinction, Credit பெறுபேறடைய ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும். அனுபவமுள்ள ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. [47616]

## விற்பனைக்கு

சகல பிரபல்யமான கல்லூரிகளுக்கு மத்திபமாகவும், பெரிய தபாற் கந்தோருக்கு முன்பாகவும் பெரிய கோயில் சின்னக் கடைக்குச் சமீபமாகவும் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு. 4 பெரிய படுக்கை அறைகளும் சமையல் அறை, களஞ்சிய அறை, குளியல் அறை, மல கூடம், கிணறு என்பனவும் அகன்ற நிலப்பரப்பும் கொண்ட 2½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

சனி ஞாயிறு நாள்களில் தொடர்பு கொள்ளவும்.

**இல. 4,**
**மவுண்கார்மேல் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(47634)


### புலமைப்பரிசில் 97

புலமைப்பரிசில் '97 - ஆண்டு - 5- க்குரிய மாதிரி வினாக்கள் விடைகளுடன் 'Bright Scholar' விற்பனையாகின்றது. தொடர்பு; ஆசிரியர் ஆனந்தசபேசன், Shamrock, யா / ஈச்ச மோட்டை வீதி, யாழ்ப்பாணம். [47686]

### O/L கணிதம் 97

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும், இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 31 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடைய கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல. 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. [47583]

## 90 ஆம் நாள் நினைவலைகள்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 01 | 10 |
| 04 | 03 |
| 1970 | 1997 |

### காசிப்பிள்ளை ஞானசேகரம்


பாசத்தைப் பொழிந்து அன்புடன் வளர்த்து
எம் நெஞ்சங்களில் என்றுமே நீங்காத ஞானமே!
இளவயதிலேயே இறைவனடி சேர்ந்துவிட்ட
எம் அரிய செல்வமே!
உன்னை நினைந்து உருகும் எங்கள் இதயக் கோயிலில்
என்றும் நீ நிலைத்திருப்பாய்.

உன்பிரிவால் வாடும்:

அம்மா, சகோதர சகோதரிகள்
மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

கரணவாய் மத்தி,
கரவெட்டி. (47682)

## ஓராண்டு நினைவலைகள்



### அமரர் நாகமுத்து இராமச்சந்திரன்

(மினிப்பிரியா றேடேர்ஸ் முதலாளி) - அச்சுவேலி

தாயின் மடியில்: 14 – 10 – 1947
ஆண்டவன் அடியில்: 19 – 06 – 1996

**திதி: 08 - 06 - 97**

பேரோடும் புகழோடும் வாழ்ந்து விட்ட செம்மலே!
ஊருக்கு நீர் ஓர் உபகாரி
ஊக்கமுள்ள முதலாளி
சீருக்கெல்லாம் அதிபதி
கண்கலங்கி நின்றோர்க்கு
கரையேற்றும் தோணி!
அன்புக்கோர் இல்லிடம்
பாசத்துக்கோர் பிறப்பிடம்.
கருணையின் நாயகமாக வாழ்ந்திட்ட
அன்புத் தெய்வமே!
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டு சென்றாலும்
நின் நினைவுகள் என்றும் மறப்பதற்கில்லை.

மனைவி: இ. ரஞ்சினி,
[illegible]

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி. (47628)

## யா/இணுவில் இந்துக் கல்லூரி

### க. பொ. த (உ. த)

### கலை, வர்த்தக வகுப்புகள் - 1999

தகுதியான மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பாடங்கள்**

| | |
|---|---|
| தமிழ் | பொருளியல் |
| இந்துநாகரிகம் | புவியியல் |
| இந்துசமயம் | அளவையியல் |
| நாடகமுகம் அரங்கியலும் | வணிகக்கல்வி |
| சமஸ்கிருதம் | கணக்கீடு |

வணிகப்புள்ளிவிவரவியல்

**விண்ணப்ப முடிவு திகதி: 12 - 6 - 97**

சுந்தரம் தம்பித்துரை,
அதிபர்.

[47668]

## சைவ வித்தியாபிவிருத்திச் சங்கம்

# வெற்றிடம்

### உப விடுதி மேற்பார்வையாளர்

திருநெல்வேலி கலாசாலை வீதியில் அமைந்துள்ள எமது சிறுவர் நிறை வாழ்வு இல்லத்துக்கு ஓர் உப விடுதி மேற் பார்வையாளர் (பெண்) தேவை.

வேட்பாளர் குடும்பப் பொறுப்புக்கள் அற்றவராயும் இல்லத்தில் தங்கியிருந்து பிள்ளைகளைப் பரிவோடு பராமரித்து வழிநடத்தக் கூடியவராயும் இருக்க வேண்டும்.

வயது — 35 இன் மேல்.
கல்வித் தகைமை - க. பொ. த. (சா/த)
ஊதியம் — பேசி நிர்ணயிக்கப்படும்
விண்ணப்பம் — 1997-06-14 இன் முன்

சோ. பத்மநாதன்
செயலாளர்,
சைவவித்தியாபிவிருத்திச் சங்கம்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி. (சி-892)

## நன்றி நவிலல்

எமது அன்புத் தெய்வமான

### அமரர் நா. சி. நாகலிங்கம்


அவர்களின் இறுதிக் கிரியைகளின் போதும், பின்பும் நேரில் வருகை தந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மற்றும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்டவர்களுக்கும், ஏனைய வழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இறுதிக் கிரியைகளின் போதும், பின்பும் கலந்து கொண்டவர்களில் அந்தியேட்டி அழைப்பிதழ் கிடைக்கப் பெறாதவர்களிடம் மன்னிப்புக் கோருகின்றோம்.

-குடும்பத்தினர்.

ஆக் லேன், உடுவில். (47677)

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 12 | 10 |
| 02 | 06 |
| 1925 | 1986 |

### அமரர் தம்பு கதிரவேலு

(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்,
நிருவத்தம்பை, ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

**திதி: 08 - 06 - 1997**

அன்பால், பண்பால் எங்களிடையே வாழ்ந்த பொறுமையின் உறைவிடமாகிய நீங்கள் அமரத்துவம் அடைந்து பதினொரு வருடங்கள் கழிந்தாலும், எம் நெஞ்சங்களில் நிறைந்திருக்கிறீர்கள்.

உங்கள் ஆத்மாசாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

29, ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை. (47536)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தமிழகத்துக் ஹர்த்தால்

ஈழத்துத் தமிழர்களுக்கு ஆதரவாகக் கடந்த வெள்ளிக்கிழமை தமிழகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஹர்த்தாலுக்குப் பெரும் வரவேற்புக் கிடைக்கவில்லை என்று அறிவிக்கப்பட்டது. எனினும் இந்தக் ஹர்த்தாலை ஏற்பாடு செய்த திராவிடக் கழகத்தின் தலைவர் கி. வீரமணி ஹர்த்தாலுக்கு தமிழக மக்கள் பெரும் ஆதரவளித்தனர் என்று தெரிவித்திருக்கிறார்;

ஈழத் தமிழர்கள் தமது நாட்டில் படும் அவஸ்தைகளையும், அவலங்களையும் உலகுக்கு எடுத்துக் காட்டுவதே மேற்படி ஹர்த்தாலின் பிரதான குறிக்கோளாக இருந்தது. ஈழத்துத் தமிழர்கள் பல்வேறு வகைகளாலும் கொலை செய்யப்படுவதற்கு ஆட்சேபம் தெரிவிப்பதும் ஹர்த்தாலின் நோக்கம்.

தமிழக ஆளுங்கட்சிகளான தி. மு. கவும், தமிழ் மாநில காங்கிரஸும் ஹர்த்தாலில் பங்கு கொள்ளவில்லை.

ஹர்த்தாலைத் தோல்வியுறச் செய்யும் உள் நோக்கத்துடன் தி, மு. க. அரசு தனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்திப் பல முன் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. மக்கள் பிரஸ்தாப ஹர்த்தாலில் பங்கு கொள்ளாதிருப்பதற்காக, அவர்களைப் பயமுறுத்தும் வகையில் முதல் நாள் வியாழக்கிழமையே மூவாயிரத்து ஐநூறு பேரைத் தமிழக அரசு கைது செய்திருந்தது.

ஈழத்தமிழருக்கு ஆதரவான இந்தக் ஹர்த்தாலில் தமிழக ஆளுங் கட்சிகள் பங்குபற்றி இருந்தால் மோதல்கள், வன்செயல்களை எதிர்பார்த்திருக்க நியாயமில்லை. மிகஅமைதியாகத் தமிழக மக்களின் நிலை வெளிக் கொணரப்பட்டிருக்கும்.

1983 ஆம் ஆண்டின் பின்னர் தமிழக அரசியல்வாதிகள், ஈழத்தமிழர் விவகாரத்தைத் தமக்கு மக்கள் ஆதரவு திரட்டும் — வாக்குச் சேகரிக்கும் — சாதனமாகப் பயன்படுத்தி வந்தது ஒன்றும் இரகசியம் அல்ல. அந்தச் சந்தர்ப்பத்தை எல்லோரையும் விட மிக அதிகளவில் பயன்படுத்தியவர் கலைஞர் கருணாநிதியே.

ஆனால் இம்முறை தாம் ஆட்சியில் உள்ளதால், மத்திய— புதுடில்லி— அரசிலும் தமது கட்சி கூட்டாளியாக இருப்பதால் எந்தவகையிலும் கறுப்புப்புள்ளி தேடக்கூடாது என்று ஹர்த்தாலில் இருந்து ஒதுங்கிக் கொண்டது மட்டுமன்றி அது வெற்றிபெறாமல் தடுக்கவும் முயன்றிருக்கிறார்.

ஈழத்தமிழர்களின் உரிமைகள் கிடைக்க அழுத்தம் போடக்கூடிய அரசியற் பலமும் (தமிழகத்தில் மட்டுமன்றி புதுடில்லியிலும்) செல்வாக்கும் முன்னர் எப்போதும் உள்ளதை விட இப்போது கருணாநிதிக்கு உண்டு. இதனைப் போல இன்னொரு சந்தர்ப்பம் இனிமேல் கிடைக்காது எனலாம்.

அவர் தமது அரசியல் லாபத்தைக் கருதி ஈழத் தமிழர்களின் அவலங்களைக் காண மறுத்திருக்கலாம். அது வேறுவிடயம். ஆனால் தமிழக மக்கள் தமது மனநிலையை ஜனநாயக முறையில் வெளிக்காட்ட விடாமல் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டது முழுக்க முழுக்கவே சொந்த இனத்துக்குச் செய்யும் ஈனத்தனமாகும்;

# விசேஷ அ. அட்டைகள் வழங்கும் செயற்பாடு இம்மாதத்துடன் பூர்த்தி

## முறைப்பாடுகளைத் தெரிவிக்க சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

விசேட அடையாள அட்டைகள் வழங்கும் செயற்பாடு இம்மாதத்துடன் பூர்த்தி செய்யப்பட இருப்பதாக யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் அறிவித்துள்ளார்.

எஞ்சியிருக்கும் வேலைகள் அடையாள அட்டைத் திணைக்களத்தால் தொடர்ந்தும் சில அலுவலர்களைக் கொண்ட அலகினால் செயற்படுத்தப்படும்.

யாழ். செயலகத்தில் விசேஷ அடையாள அட்டை விநியோகத்தை நிறுத்த முன் பொது மக்கள் தமது குறைபாடுகளைத் தெரிவிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுத்தப் பட்டுள்ளது.

விசேஷ அடையாள அட்டையை பெற விண்ணப்பித்து அது கிடைக்காதவர்கள், திருத்தங்கள் செய்ய விரும்புவோர் மற்றும் வேறு ஏதும் முறைப்பாடுகள் தெரிவிக்க விரும்புவோர் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விசேஷ அடையாள அட்டைப் பகுதி கருத்திட்ட முகாமையாளரை கீழ் வரும் நாள்களில் குறிப்பிட்ட இடங்களில் சந்தித்து குறைகளை தெரிவிக்க முடியும்.

★ உடுவில், தெல்லிப்பழை உ. அ. அ. பிரிவுகளைச்சேர்ந்தவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9 மணி முதல் 4மணிவரை உடுவில் பிரதேச சபை அலுவலகத்திலும்—

★ சங்கானை உ. அ. அ. பிரிவைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 9 மணி முதல் சங்கானை உ. அ. அ. அலுவலகத்திலும் —

★ சண்டிலிப்பாய் உ. அ. அ. பிரிவைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் 12 ஆம் திகதி பிற்பகல் 1 மணி முதல் சண்டிலிப்பாய் உ. அ. அ. அலுவலகத்திலும் —

★ சாவகச்சேரி, பளை உ. அ. அ. பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் எதிர் வரும் 16 ஆம் திகதி காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணிவரை சாவகச்சேரி உ. அ. அ. அலுவலகத்திலும் —

★ கரவெட்டி உ. அ. அ. பிரிவைச் சேர்ந்தவர்கள் எதிர் வரும் 18 ஆம் திகதி காலை 9 மணி முதல் கரவெட்டி உ. அ. அ. அலுவலகத்திலும் —

★ பருத்தித்துறை உ. அ. அ. பிரிவைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி பி. ப. 1 மணி முதல் பருத்தித்துறை உ. அ. அ. அலுவலகத்திலும் —

★ வேலணை, ஊர்காவற்துறை, நெடுந்தீவு உ. அ. அ. பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9.30 மணி முதல் மாலை 4 மணி வரை ஊர்காவற்துறை உ. அ. அ. அலுவலகத்திலும் —

★ கோப்பாய் உ. அ. அ. பிரிவைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 9-30 மணி முதல் மாலை 4 மணி வரை கோப்பாய் உ. அ. அ. அலுவலகத்திலும் —

★ நல்லூர் உ. அ. அ. பிரிவைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 9-30 மணி முதல் மாலை 4 மணி வரை யாழ். செயலக விசேட அடையாள அட்டை பிரிவிலும் —

★ யாழ்ப்பாணம் உ. அ. அ. பிரிவைச் சேர்ந்தவர்கள் எதிர் வரும் 25 ஆம் திகதி காலை 9-30 மணி முதல் மாலை 4 மணி வரை யாழ். செயலக விசேட அடையாள அட்டைப் பிரிவிலும் —

★ யாழ். கல்வித் திணைக்களம் வலயம் 1 இன் சகல பாடசாலை அதிபர்களும் எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 9-30 மணி முதல் மாலை 4 மணி வரை யாழ். செயலக விசேட அடையாள அட்டைப் பிரிவிலும் —

★ யாழ். கல்வித் திணைக்களம் வலயம் - 2 இன் சகல பாடசாலை அதிபர்களும் எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை யாழ். செயலக விசேஷ அடையாள அட்டை பிரிவிலும் —

★ மருதங்கேணி உ. அ. அ. பிரிவைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 9.00 மணி முதல் மாலை 4 மணி வரை மருதங்கேணி உ. அ. அ. அலுவலகத்திலும் — சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-4)

## கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 8

காங்கேசன்துறையில் இருந்து திருமலைக்கு இன்று 650 பயணிகளுடன் கப்பல் சேவை இடம்பெறவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

பட்டியல் இலக்கம் 561—585க்கு உட்பட்ட பயணிகளை இன்று காலை 7 மணிக்கு முன் யாழ். ரயில் நிலையப் பகுதியில் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதேவேளை —

பட்டியல் இலக்கம் 561, 565, 566 என்பன நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையுடன் ரத்துச் செய்யப்படவுள்ளதால் இவற்றில் இடம்பெற்றுள்ள பயணிகள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நகரப்பகுதி சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ். நகரப் பகுதியில் நேற்று இராணுவத்தினர் திடீர் சுற்றிவளைப்பு ஒன்றை மேற்கொண்டனர்.

நேற்றுக்காலை 10.00மணியிலிருந்து 11.00 மணி வரை இடம்பெற்ற இந்த சுற்றிவளைப்பின் போது யாழ்ப்பாணம் வெலிங்டன் சந்தி,வின்சர் தியேட்டர்சந்தி, மானிப்பாய் காங்கேசன்துறை வீதிச் சந்தி, சத்திரத்துச் சந்தி ஆகிய பகுதிகளூடாக மக்கள் பஸ் நிலையப் பகுதிக்குள் நுழையாது தடைசெய்யப்பட்டிருந்தது.

அதேபோல அப்பகுதிக்குள் இருந்தோர் வெளியேறவும் அனுமதிக்கப்படவில்லை.

11.00 மணிக்குப் பின்னர் சுற்றிவளைப்பு முடிவடைந்து வழமை நிலை ஏற்பட்டது. (இ-15)

# நோயாளியின் திருடப்பட்ட ரூ.4000 பணம் மீட்கப்பட்டது

## யாழ். ஆஸ்பத்திரியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளி ஒருவரின் பணத்தைத் திருடிய ஒருவர் ஆஸ்பத்திரிப் பாதுகாப்பு உத்தியோகத்தரால் பிடிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் பெண்கள் வார்ட்டில் சிகிச்சை பெற்று வந்த பண்டத்தரிப்பு பற்றிமா வீதியைச் சேர்ந்த அமிர்தலிங்கம்சரஸ்வதி என்றநோயாளியே பணத்தைப்பறிகொடுத்தவர் ஆவார்.

அவரது தலையணைக்குள் இருந்து 4 ஆயிரம் ரூபா காணாமற் போய் இருந்தது. அருகில் இருந்த மற்றொரு நோயாளியைப் பராமரிக்கும் ஒருவரால் இப்பணம் திருடப்பட்டது என ஆஸ்பத்திரி பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

முறையீட்டைத்தொடர்ந்து வார்ட்டுக்குச்சென்ற பாதுகாப்பு அதிகாரி பணம் திருடியவர் என குற்றம் சாட்டப்பட்டவரை விசாரணைக்குட்படுத்திய போது நண்பகல் தம்மைப் பார்க்கவந்த தமது தந்தையிடம் அப்பணத்தைக் கொடுத்து விட்டதாகவும், தந்தை காரைநகருக்குச் சென்று விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டதாம்.

பின்னர் காரைநகருக்கு ஆள் அனுப்பப்பட்டு பணம் மீளப் பெறப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ-15)

# மேலதிக நேரக் கொடுப்பனவு அடுத்த ஆண்டு முதல் நிறுத்தம்

கொழும்பு, ஜூன் 8

அரசாங்க ஊழியர்களின் மேலதிக நேரக் கொடுப்பனவை அடுத்த ஆண்டு முதல் நிறுத்துவது என அரசு தீர்மானித்துள்ளது.

அரசாங்கப் பணிமனைகளுக்குத் தேவையான மோட்டார் வாகனங்கள், பணிமனை உபகரணங்கள் ஆகியவற்றை அடுத்த ஆண்டு கொள்வனவு செய்வதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் செயலாளர் பி. சி. பெரேராவால் அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையில் 4.8 சதவீதத்தைக் குறைப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## நாளை

**வைகாசி 26**

**திங்கட்கிழமை**

திதி: சதுர்த்தி

பிற்பகல் 3.13 வரை;

நட்சத்திரம்: பூசம்

முன் இரவு 10.58 வரை;

சதுர்த்தி விரதம்

சுபநேரம் 11.52-1.22

[illegible]

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## சமய சந்திகளில்

அரியாலை மேற்கு வெட்டுக் குளம் புவனேஸ்வரி அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகிறது, பிற்பகல் 2 மணிக்கு அம்பாள் உள்வீதி உலா வருவார். (ஐ)

★ ★ ★

சாவச்சேரி - மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணி முதல் 6,16 மணிவரை நடைபெறும்.

★ ★ ★

தொல்புரம்- வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த கொடியேற்ற உற்சவம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும். தொடர்ந்து பதினொரு தினங்கள் திருவிழா நடைபெறும். தினமும் காலைத் திருவிழா பகல் 1 மணிக்குள்ளும் மாலைத் திருவிழா மாலை 6.30 மணிக்குள்ளும் முடிவடையும். (ஐ-28)

★ ★ ★

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழாவில் எதிர்வரும் 13ஆம் திகதி முதல் 20 ஆம் திகதிவரை திருச்செபமாலையும் திருப்பலியும் 4 மணிக்கு நடைபெறும்.

21 ஆம் திகதி மாலை 4 மணிக்குபுனித மரியன்னை ஆலயத்தில் திருப்பலியைத் தொடர்ந்து திவ்விய நற்கருணை எழுந்தேற்றம்செய்யப்படும். தொடர்ந்து நற்கருணை பவனி புனித யாகப்பர், புனித சூசையப்பர் ஆலயங்கள் வழியாகச் சென்று புனித அந்தோனியார் ஆலயத்தை அடையும். அங்கு நற்கருணை ஆசீர் இடம் பெறும். (ஐ - 30)

★ ★ ★

கொக்குவில் மேற்கு ஸ்ரீ மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தின் மணவாளக் கோல உற்சவத்தை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை காலை 8.00 மணி முதல் முருகப்பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் 1008 சங்காபிஷேகம் நடைபெற்று விசேட பூசைகளும் இடம் பெறும்.

மாலை 3.00 மணியளவில் வள்ளி, தெய்வானை சமேத முருகப்பெருமான் விநாயகப் பெருமான் சகிதம் பூந்தண்டிகையில் வீதி உலா வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். (ஐ - 30)

★ ★ ★

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும்.

தேர்த்திருவிழா எதிர்வரும் 19ஆம்திகதியும், தீர்த்தத் திருவிழா மறுநாள் 20 ஆம் திகதியும் இடம்பெறும்.

★ ★ ★

கொழும்புத்துறை ஆத்தியம்பதி அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணி தொடக்கம் வளர்பிறை பூர்வபட்ச சதுர்த்தித் திருவிழா நடைபெறும். விநாயகப் பெருமான் மூஷிக வாகனத்தில் உள் வீதி வலம் வந்து அடியார்களுக்குஅருள்பாலிப்பார்;

★ ★ ★

நீர்வேலி அருள் மிகு செல்லக்கதிர்காம சுவாமி கோயில் புனருத்தாரண (பஞ்சகுண்ட பட்ச) மஹா கும்பாபிஷேகம் நாளை நடைபெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 நாள்கள் அலங்கார உற்சவத்துடன் மண்டலாபிஷேகமும் நடைபெறும். (ஐ-15)

★ ★ ★

நவாலி அட்டகிரி முருகன் தேவஸ்தான வருடாந்த உற்சவம் நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. (ஐ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம்.பிக்களின் எண்ணிக்கையைக் குறைக்க ஆலோசனை

கொழும்பு, ஜூன் 8

நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 225 இலிருந்து 198 ஆக குறைக்கும் புதிய திட்டம் ஒன்று அரசாங்கத்தினால் நாடாளுமன்ற தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 199க்கு மேல் இருக்கக்கூடாது என அரசு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ-10)


**விக்னா கல்வி நிறுவனம்**

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

அன்றும் இன்றும் O/L வகுப்புகளுக்கு தனித்துவம்வாய்ந்த ஒரே நிறுவனம்.

**O/L DAY CLASS**

(8-00 TO 2-00) பிரிவு 3

ஆரம்பம்: 14 - 06 - 97

★ 23 வருட கல்விச் சேவை
★ ஆசிரியர் குழுவின் அயராத உழைப்பு
★ கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இதுவே எமது கோட்பாடு.

(47683)



அரியாலை

**ஜெயபாரதி சனசமூக நிலையத்தின்**

50 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி

அரியாலை மேகாஸ் வீடியோ சென்ரர்

ஆதரவுடன் நடத்தப்படும்

உதைபந்தாட்ட (9 பேர் அணி)

கரப்பந்தாட்ட ('செற் - அப்')

**சுற்றுப் போட்டிகள்**

விண்ணப்ப முடிவு திகதி:- 15 — 06 — 1997

விண்ணப்பக் கட்டணம்:- ரூபா 100/-

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

செயலாளர்,
ஜெயபாரதி ச. ச. நிலையம்,
12, கண்டி வீதி, அரியாலை. (47697)



**நவீன மருத்துவ ஆலோசனை நிலையம்**

உங்கள் உடல், உள நலம் சம்பந்தமான வைத்திய ஆலோசனைகளைப் பெறுவதற்கு நாளை மலரும் புது இணைப்பு

ஆரம்பம்: 09-06-1997

514/1 மருத்துவமனை வீதி,
(றோயல் பார்மசிக்கு அருகாமை ஒழுங்கை)
யாழ்ப்பாணம்.

MODERN MEDICAL CONSULTANCY SERVICES

Opening on 9 th June 1997
at 514/1 HOSPITAL ROAD, JAFFNA.
(Lane Adjoining Royal Pharmacy) (47695)



வலி - கிழக்கு தென்பகுதி

**பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

நீர்வேலி

**அறிவித்தல்**

சகல அங்கத்தவர்களுக்கும்

அங்கத்துவப்பட்டியல் முடிவுறுத்தல்

30—06—1997

மேற்படி சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தலை நடத்துவதற்காக சகல கிளைகளிலும் உள்ள அங்கத்துவ இடாப்புகள் 30-06-97 உடன் முடிவுறுத்தப்படவுள்ளது. ஒரு பங்கின் பெறுமதி ரூபா நூறு (100/-) ஆகும். எனவே முழு அங்கத்துவ பங்குப்பணத்தைக் கொண்டிராத அங்கத்தவர்களிடமிருந்து மீதி பங்குப் பணத்தை 30-06-97 வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றோம். கிளை நிலையங்களில் பங்குப்பணத்தைச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.

முக்கிய கவனிப்பு:-

30-06-97 க்குப் பின்னர் செலுத்தப்படும் பங்குப் பணங்களுக்குரிய அங்கத்தவர்களது பெயர்கள் கிளைக்குழுத் தேர்தலுக்கான அங்கத்துவப் பட்டியலில் இடம் பெறமாட்டாது. எதிர்வரும் கிளைக்குழுத் தேர்தல் 30-06-97 இல் உள்ள அங்கத்தவர் பட்டியலின்படி நடைபெறும்.

ச. குமாரசாமி — தலைவர்.
கே. செல்விகாராணி — பதில் செயலாளர்.

(சி/897)


## வேதாகம போட்டி முடிவுகள்

கொழும்பு, ஜூன் 8

கொழும்பு வேதாகமச் சங்கத்தினால் அகில இலங்கை ரீதியில் நேற்று நடத்தப்பட்ட வேதாகமப் போட்டிகளில் சிரேஷ்ட பிரிவில் மொரட்டுவை பரி. இம்மானுவேல் தேவாலயமும் —

கனிஷ்ட பிரிவில் றோயல் கல்லூரியும் — வெற்றி பெற்றன.

இதற்கு முன்னோடியாக மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட போட்டிகளில் யாழ். மாவட்டத்தில் இருந்து சிரேஷ்ட — கனிஷ்ட இரு பிரிவுகளில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிகள் வெற்றி பெற்று கொழும்பில் நடந்த போட்டிகளில் கலந்து கொண்டது தெரிந்ததே. (இ)

## வடமராட்சியில் கசிப்பு உற்பத்தி

யாழ்ப்பாணம், ஜூன் 8

வடமராட்சி அல்வாய்ப் பகுதியில் சில கிராமங்களில் கசிப்பு உற்பத்தி இடம் பெறுவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

கசிப்பு உற்பத்தி அதிகரித்திருப்பதால் அப்பகுதிகளில் சமூக விரோதச் செயல்களும் அதிகரித்துள்ளன. (ஐ-15)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்)

★ ரா. துரைநாயகம் — ஆனைக்கோட்டை.
★ க. கிருபைராஜா — சாவற்கட்டு.
★ த. ஸ்ரீகாந் — தாவடி தெற்கு.
★ கோ. ரஜிந்தன் — ஆனைக்கோட்டை.
★ க. பிரேம்குமார் — வண்ணார்பண்ணை.
★ சி. விஜயகுமார் — வண்ணார்பண்ணை.
★ சி. புஸ்பராஜா — சாவற்கட்டு.
★ து. விமல் சாவகச்சேரி.
★ வே. கிருஸ்ணகுமார் — சாவகச்சேரி.

மகர சிறையிலிருந்து ஏற்கனவே அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இவர்கள் ரூபா 25 ஆயிரம் பிணைப்பணம் செலுத்த முடியாத நிலையில் தடுத்து வைக்கப்பட்டு நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர். (இ-21-4)

## கடந்த...

(முதலாம் பக்கத் தொடர்)

பட்டுள்ளனர் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்த இரு நாள் சண்டைகளில் வெள்ளிக்கிழமையே பெரும் மோதல் இடம்பெற்றதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் தெரிவித்தது.

நெடுங்கேணியில் இருந்து முன்னேறிய படையினரை பெரிய மடுவில் புலிகள் எதிர்கொண்டு நேருக்குநேர் சண்டையிட்டதாகவும் —

இந்தசண்டைகளில் 95 புலிகள் வரை கொல்லப்பட்டதாகவும் — அது மேலும் தெரிவித்தது.

எனினும் 15 பேரே களப் பலியானதாகவும் புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரு நாள் சண்டைகளிலும் படையினர் தரப்பில் பீரங்கிகள், கிபிர் குண்டு வீச்சு விமானங்கள், எம். ஐ -24 தாக்குதல் ஹெலிகள் பெருமளவில் பயன்படுத்தப் பட்டன. (இ-4-10-21-164)

## கப்பல் சேவை...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின்னர் பயணம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்றும் —

அவர்கள் மீண்டும் புதிதாகவே பயணத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (இ-ஐ-10)

## விலக்கப்பட்டது குறித்து எம். பிகளுக்கு அறிவிப்பு

ஈ. பி. டி. பியில் இருந்து விலக்கப்பட்ட அ. இராமமூர்த்தி, அ. இராமேஸ்வரன் ஆகிய இருவரையும் கட்சியில் இருந்து விலக்கும் உத்தியோகபூர்வ கடிதம் 6- 6- 97 திகதியிட்டு ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவினால் இந்த இருவருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து 3 எம். பிக்கள் அடங்கியகுழு விசாரணை நடத்தியதாகவும் —

அ. இராமேஸ்வரன் மீது 8 குற்றச்சாட்டுக்களும் அ. இராமமூர்த்தி மீது 3 குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-21)

## கூட்டுறவுப் பரிசோதகர் பதவிகள் வெற்றிடம்

யாழ். மாவட்டத்தில் கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கு பற்றாக்குறை உள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களின் பரிபாலனம், எண்பார்வை போன்றவற்றை செய்வதற்கு 120 கூட்டுறவுப் பரிசோதகர்கள் தேவை— ஆனால் தற்போது 36 பரிசோதகர்கள் மட்டுமே உள்ளனர்.

இவ்வருட நிதி ஒதுக்கீட்டில் 46 பேருக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

மிகுதியாக உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு கூட்டுறவு அமைச்சின் அனுமதியைப் பெறுவதற்கு வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளதாக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் தெரிவித்தார். (ஐ-118)

## கடற்றொழில் பரிசோதகர்கள் 8 பேர் மட்டுமே இங்கு கடமை

நெடுந்தீவு, ஜூன் 8

21கடற்றொழில் பரிசோதகர்கள் கடமையாற்றிய யாழ். மாவட்டத்தில் தற்சமயம் எட்டு கடற்றொழில் பரிசோதகர்கள் மட்டுமே கடமையாற்றுகின்றனர்.

இதனால் ஒருவர் மூன்றுக்கு மேற்பட்ட கடற்றொழில் வலையங்களின் கடமைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும், கடற்றொழிலாளர்கள் தமது தேவைகளின் பொருட்டு கடற்றொழில் பரிசோதகர்களைச் சந்திக்க முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை நெடுந்தீவு, காரைநகர், ஊர்காவற்றுறை, வேலணை என நான்கு கடற்றொழில் பிரதேசங்கள் தீவுப் பகுதியில் இருந்தபோதும் அவற்றுக்கு கடற்றொழில் பரிசோதகர்கள் இன்றி வெற்றிடமாகவே உள்ளதால் தீவுப்பகுதி மீனவர்கள் தமது தேவைகளை நிறைவேற்ற முடியாமல் உள்ளனர். (ஐ-111)

## அச்சுவேலி பிரதேச சபை உப அலுவலகத்துக்கு கட்டடம்

### ரூ. 14 லட்சம் செலவில் அமைப்பு

அச்சுவேலி, ஜூன் 8

அச்சுவேலி பிரதேச சபை உப அலுவலகத்துக்கு 14 லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

அச்சுவேலி பொதுச் சந்தையின் மேல் தளத்தில் புதிய அலுவலகக் கட்டடத் தொகுதி நிறுவப்படும்.

அலுவலகம், நூல் நிலையம், மருந்தகம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக புதிய கட்டடத் தொகுதி நிறுவப்பட உள்ளது.

அச்சுவேலி உப அலுவலர் கட்டடம் விமானக் குண்டுவீச்சுக்கு உள்ளாகி முற்றாக சேதமடைந்ததை அடுத்து தனியார் இல்லம் ஒன்றில் அச்சுவேலி உப அலுவலகம், நூல் நிலையம், மருந்தகம் என்பன செயற்படுகின்றன (.இ-11)

## மலேசியாவில் பரவிவரும் ஒருவகை வைரஸ் கிருமி

### 20 சிறுவர்கள் இதுவரை பலி

மலேசியாவில் வேகமாகப் பரவி வரும் பயங்கர வைரஸ் கிருமி ஒன்றைக் கட்டுப்படுத்துவதற்கு அமெரிக்க வைத்திய நிபுணர்கள் அழைக்கப் பட்டுள்ளார்கள்.

இந்த வைரஸுக்கு 20 சிறுவர்கள் இதுவரை பலியாகி உள்ளனர்.

இந்த அரிதான வைரஸ் கிருமிகள் போணியோவின் சரவஸ் தீவுப்பகுதியில்கடந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிலிருந்து இதுவரை 59 பேர் இந்த வைரஸ் கிருமியினால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்கள்.

மேலும் பரவாமல் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு கடுமையான தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (இ-4)

## வெள்ளியன்று...

(முதலாம் பக்கத் தொடர்)

தமிழ்பரிதி (கப்டன் றெஜி, யாழ்ப்பாணம்), பாவேந்தன் (நாகலிங்கம் தவநேசன், உருத்திரபுரம்), புன்னகைச் செல்வன் (பொன்னையா சிவராஜன், புளியங்குளம்), வஞ்சிக்கொடி (சின்னத்தம்பி அம்பலவன், வட்டக்கச்சி), எழிலன் (பழனிமுத்து பூங்கொடியான், வவுனியா), தமிழ்மணி (கந்தசாமி பரமேஸ்வரன், (கரியாலை நாகபடுவான்), ஜெறாட் (சண்முகம் சந்திரராஜா, பூநகரி) அருள்மொழி (செல்வராஜா வளர்மதி, மட்டக்களப்பு), சுடர்மொழி (கதிரன் புவனேஸ்வரன், யாழ்ப்பாணம்), கீர்த்திகா (கணபதிப்பிள்ளை துகிதாவதி, நெடுங்கேணி), வனிதா (வைரமுத்து திலகா, நெடுங்கேணி), ஏழிசைநம்பி (சுப்பிரமணியம் குமாரவேல், வவுனியா).

ஆகியோரே இந்த 15 பேரும் ஆவர். (இ-10-164)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08-06-1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org